பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 03 செவ்வாய்கிழமை 16.04.2024 கதிர் 160

# பொது வேட்பாளரை நிறுத்துவதில் தமிழ் மக்களுக்கு ஆர்வம் இல்லை

### சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெளிவுரை

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் தமிழ் மக்கள்ஆர்வம்காண்பிக்கவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னிமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜனாதிபதித் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பானஅரசியல்கதையாடல்கள் சுவாரஸியமான கட்டத்தை எட்டியுள்ளன. நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில்செய்தியாளர்களிடம் பேசியபுளொட்அமைப்பின்தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அறிந்தோ அறியாமலோ ஒரு உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டார் என்றே படுகின்றது. பழுத்த அரசியல்வாதிகள் தங்கள் கூற்றுக்கள், வார்த்தைகள் தொடர்பில் கவனமாகவே இருப்பார்கள். இருந்தாலும் எப்போதாவது அவர்களின் வாயிலிருந்து வார்த்தைகள் - உண்மையான வார்த்தைகள் நழுவிவிடுவதுவழக்கம். அப்படித்தான் சித்தார்த்தனின் செய்தியாளர் சந்திப்பிலும் நடந்துவிட்டது போலும்.

பொது வேட்பாளர் தொடர்பான தனது கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தியசித்தார்த்தன், முதலில் தமிழ்அரசுக்கட்சிபொதுவேட்பாளரை ஆதரிப்பதுமுக்கியம்என்பதுஆரம்பத்திலிருந்து தனது நிலைப்பாடு என்றார். அடுத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் நிலைப்பாட்டை விமர்சித்தார். ☞ 2

## 24 மணி நேரத்தில் மட்டும் வீதி விபத்துகளில் 11 பேர் சாவு

நாடாளவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் மா அதிபர் இந்திய ஹப்புகொட தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஞாயிறு இரவு, குருநாகலில் இருந்து கம்பளைப் பகுதிக்குச் சென்ற வானொன்று புசல்லாவைப் பகுதியில் குடைசாந்ததில்உயிரிழந்தவர்களின் எண்ணிக்கைமூன்றாகஅதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களில் இரண்டரை வயது குழந்தையும் அடங்குகின்றது. ஐவர் காயமடைந்துள்ளனர்.

பதுளை பண்டாரவளை வீதியில் ஹாலிஎல்ல பகுதியில் கார் ஒன்று மரத்துடன் மோதியதில் இருவர் உயிரிழந்தனர். ☞ 2

## கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக விவகாரத்தில் உடனடியாக தலையிடுங்கள்

### பிரதமர் தினேஷ்க்கு முன்னணி செயலர் கடிதம்

கல்முனை வடக்கு பிரதேசசெயலகவிவகாரத்தில் உடனடியாகத்தலையிடுங்கள் என்றுகோரிபிரதமர்தினேஷ் குணவர்த்தனவுக்குதமிழ்த் தேசியமக்கள்முன்னணியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கல்முனைவடக்குபிரதேச செயலகத்தின் நிர்வாகப் பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதியான முறையில் போராட்டம் நடத்துவது தொடர்பாகவும், கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாகத்தில் முறைகேடுகளால் பொது மக்கள் முகங்கொடுக்கும் நீண்டகாலப்பிரச்சினைகளை கவனத்திற்குக் கொண்டு வருவதற்காவும் அக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூன்று தசாப்தங்களாக, கல்முனை வடக்கு தமிழ் சமூகம் தீர்க்கப்படாத சவால்களை எதிர்கொண்டுள்ளது, இது அவர்களின் அத்தியாவசிய அரசாங்க சேவைகளைப் பெறுவதற்கான திறனை கணிசமாகத் தடுக்கிறது, இதனால் அவர்களின் அன்றாட வாழ்க்கையில் நெருக்கடியான நிலைமைகளை எதிர்கொள்கின்றனர்.

கல்முனை வடக்கு பிரதேசசெயலகத்திற்கு ☞ 2

## 726 வர்த்தகர்கள் மீது பண்டிகைக் காலத்தில் சட்ட நடவடிக்கை

பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் சட்டத்தை மீறிய 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தொடரவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின்விசேட விசாரணை பணிப்பாளர் சஞ்ஜய இரசிங்க தெரிவித்துள்ளார்.

விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்தமை உள்ளிட்ட தவறுகள் தொடர்பில் இவ்வாறு வழக்கு தொடரவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 7,627 வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாணய நிதியத்துடனான உடன்படிக்கை ஆட்சியைப் பிடித்தவுடனே திருத்தப்படும்

### மக்களுக்கு நிவாரணமும் பெற்றுத் தரப்படும் என்கிறார் சஜித்

ஆட்சியைப்பொறுப் பேற்றவுடன் சர்வதேச நாணய நிதியத்துடன் உரையாடி உடன்படிக்கைதிருத்தம் செய்யப்பட்டு மக்களுக்கான நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

மாத்தறை ஷாஹீரா தேசிய பாடசாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அனைவரும் ஏமாற்று வார்த்தைகளுக்குள் அகப்பட்டு நாட்டை வங்குரோத்து அடையச் செய்த தலைவரைத் தெரிவுசெய்துவிட்டார்கள். மீண்டும் அவ்வித மான தவறு இடம் பெற்றுவிடக்கூடாது

தற்போது ஆட்சியில் உள்ளவர்கள்அனைத்து நிலைமைகளையும் சீர் செய்து விட்டதாகவும் நிலையான அபிவிருத்தி ஆரம்பமாகிவிட்டதாகவும் கூறுகின்றார்கள். ஆனால் புத்தாண்டை மக்கள் கொண்டாடிய முறைமையானது நிலைமைகள் எவ்வாறிருக்கின்றன. என்பதை வெளிப்படுத் துவதாக உள்ளன.

மக்களின் தேவைகளைச் சுருக்கி நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் செயற்பாடுகளைஏற்றுக்கொள்ள முடியாது. அதுதொடர்பில் உரியவாறான ☞ 2

## கச்சதீவில் இந்திய மீனவரின் உரிமைகள் மீறப்பட்டுள்ளன

### அந்நாட்டு அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கச்சதீவுவிவகாரத்தில் இநதிய மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதுடன் அவர்களின் உரிமைகளும் மீறப்பட்டுள்ளன. கச்சதீவு விடயத்தில் எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும். தற்போது தமிழ்நாட்டு மக்கள் உண்மையை அறிந்து கொண்டுள்ளார்கள் என்று இந்திய அயலுறவுத்துறைஅமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர்தெரிவித்தார்.

இந்தியத் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்தசெவ்வியிலேயே அவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கச்சதீவுவிவாகரத்தில் என்ன நடந்துள்ளது என்பதைத் தமிழ்நாட்டு ஆட்சியாளர் ☞ 2

## கச்சதீவுக்கு உரிமைகோரினால் இந்தியாவை நாம் எதிர்ப்போம்

### சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு

கச்சதீவை இந்தியா உரிமை கோரினால் அதற்கான எதிர்ப்பினை நாம் வெளியிடுவோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பலரும் கச்சதீவுபற்றி அதிகமாகப் பேசுகின்றார்கள். கடந்த காலங்களில் ☞ 2

## விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மூழ்கி 3 பேர் பரிதாபச் சாவு

தெல்தெனிய கும்புக்கந்துர பகுதியில் விக்டோரியா நீர்த்தேக்கத்தில்மூழ்கிபெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திஹாரிய பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட தம்பதியினர்தெல்தெனிய பகுதியிலுள்ள தமது உறவினர் வீட்டிற்கு சென்றிருந்தபோது விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்றுள்ளனர்.

நீராடிக்கொண்டிருந்தபோது 23 வயதான கணவனும் 22 வயதான மனைவியுமே நீரில் மூழ்கியுள்ளனர். அவர்களைக் காப்பாற்றுவதற்காக திகனை அளுத்வெல்ல பகுதியைச் சேர்ந்த 37 வயதானநபர் ஒருவரும்நீர்த்தேக்கத்தில் குதித் துள்ளார். மூவரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர் ☞ 2

## யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் பிரான்ஸ் நாட்டுப் பெண் உயிரிழப்பு

யாழ் மாவட்டத்தில் நீண்ட காலத்திற்கு பின்னர் கொரோனோ தொற்று காரணமாக பெண் ஒருவர் உயிரிழந்தார்.

பிரான்ஸ் நாட்டில் இருந்து ஆயுள்வேத சிகிச்சைக்காக வந்திருந்த 62 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர்வட்டுக் கோட்டை அராலியில் தங்கியிருந்த நிலையில் காய்ச்சல் காரணமாக இரண்டு நாள்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சை பயனின்றி கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

இறப்பின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

## நாணய நிதியத்தின் வசந்த கால கூட்டத் தொடர் நேற்று ஆரம்பம்

சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் வசந்த காலக் கூட்டத்தொடர் நேற்று வொஷிங்டனில் தொடங்கியது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி குழுவின் வசந்த காலக் கூட்டத் தொடரில் நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்கள், நிதி மற்றும் அபிவிருத்தி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை நிர்வாகிகள், சிவில் சமூக அமைப்புகளின் ☞ 2

## இனி இது .....

அந்தக்கட்சியும்பொதுவேட்பாளரை ஆதரிக்கவேண்டும் என்று தாம் விரும்பினாலும்அவர்கள்ஆதரிக்க மாட்டார்கள் என்றார்.

அப்போது அவர் கூறிய ஒரு விடயம்தான் முக்கியமானது. அவரதுவாயிலிருந்துவார்த்தைகள் வழுக்கியதருணம்அதுதான். தமிழ் காங்கிரஸ்காரர்கள் ''நாங்கள் ஆடுகின்ற நாடகம் என்று கூறிக்கொண்டிருக்கின்றார்கள். யாரையோ வெல்லப்பண்ணுவதற்காக நாங்கள் எடுக்கும் முயற்சி இது என்கிறார்கள். (தேர்தலை) பகிஷ்கரிப்பது என்பதையும் யாரையோ வெல்லப்பண்ணுவதற்கான முயற்சியாகவே நான் பார்க்கின்றேன். ஏனென்றால் அவர்கள் பகிஷ்கரிப்பதன் மூலம் யாரோ ஒருவருக்கு வெற்றி வாய்ப்பைக் கொடுப்பதற்கு முயற்சிக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன். ஏனென்றால்கடந்தகாலங்களில்கூட பகிரஷ்கரிப்பின் மூலம் ஒருவரைத் தோற்கடிக்கடித்திருக்கிறோம். 2---005இலே அந்த முயற்சி நிச்சயமாக அதற்காகத்தான் செய்யப்பட்டது. ரணிலைத் தோற்கடித்து மகிந்தவை வெல்ல வைப்பது. ஏனென்றால் மகிந்த சர்வதேசரீதியாகச்செல்வாக்கற்றவர் எனவே அவரை வெல்ல வைப்பது நல்லது என்கிற ஒரு அபிப்பிராயம் அன்று இருந்த காரணத்தால்தான் அன்றுஅவரைவெல்லவைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதேபோலத்தான் இன்றும் பகிஷ்கரிப்பதன் மூலம் யாரை வெல்லவைக்க முயற்சிக்கிறார்கள் என்பதை (காங்கிரஸ்) இன்னும் கூறவில்லை" என்றார் சித்தார்த்தன்.

காங்கிரஸ் பகிஷ்கரிப்பதும் யாரையோவெல்லவைப்பதற்கான முயற்சிதான், நாங்கள் பொது வேட்பாளரைப் போடுவதும் யாரையோவெல்லவைப்பதற்கான முயற்சிதான் என்பதே சித்தார்த்தனின் வாயிலிருந்து அவரை அறியாமலேயே நழுவி விழுந்த கருத்து. எனவே பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் யாரை ஜனாதிபதியாக்க ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் முற்படுகின்றார்கள் என்பதையும் அவர்கள் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தினால் நன்றாக இருக்கும். மக்களுக்கும் முடிவுகளை எடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

சித்தார்த்தனின் செய்தியாளர் சந்திப்பிலிருந்து மற்றொ-ரு கொசுறுத் தகவல், எனக்குத் தெரிந்து தமது கூட்டின் பெயரை சரியாக அவர் உச்சரித்த முதல் சந்திப்பாக இதுதான் இருந்தது. இதுவரைக்கும் தமது 5 கட்சிக் கூட்டைதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்றே அவர் கூறிவந்தார். அந்தக் கூட்டின் பேச்சாளரான சுரேஸ் பிரேமச்சந்திரன் முழுமையாகச் சரியாக ஜனநாயகத் தமிழத் தேசியக் கூட்டணி என்று கூறிவந்தாலும் அதிலிருந்த மற்றவர்கள் தமது கூட்டை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாக மக்களிடம் நிலைநிறுத்தும் ஓட்டுமாட்டுக்களில் தொடர்ந்துஈடுபட்டுவந்திருந்தார்கள். அதனால் மீண்டும் மீண்டும் தமது கூட்டை ''கூட்டமைப்பு'' என்றே அவர்கள் உச்சரித்து வந்தார்கள். இப்போதுஅதிலிருந்துசித்தார்த்தனும் விடுபட்டிருக்கிறார் போன்று தோன்றுகின்றது. இந்தச் சந்திப்பில் அவர்தெளிவாகஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணி என்று தமது கூட்டின் பெயரை உச்சரித்தார்.

அதுவும்வாயிலிருந்துநழுவிய வார்த்தைகளோ என்பது எனக்குத் தெரியாது என்றபோதும் அதுதான் அந்தக் கூட்டின் உண்மையான, தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பெயர். அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மக்கள் முன் காட்டி ஏமாற்றும் முயற்சியிலிருந்து அவர்கள் விலகத் தொடங்கியிருப்பது நல்ல அறிகுறிதான்.

சித்தார்த்தனின் சந்திப்பில் மற்றொரு விடயமும் கவனத்திற்குரியதாக இருந்தது. பொதுவேட்பாளராகசிவகுருஆதீன முதல்வர் வேலன் சுவாமிகளை நிறுத்தலாம் என்கிற முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் யோசனையும் அங்கு நிராகரிக்கப்பட்டது. அவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது சிரமம் என்ற கருத்தை அவர் முன்வைத்தார். ஆக, பொது வேட்பாளராகவிக்னேஸ்வரனுக்கும் அவரதுதெரிவுக்கும்கூட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் ஆதரவில்லை என்பது தெளிவாகின்றது. விக்னேஸ்வரன் கூட்டிய கூட்டத்திற்கு ஏன் இவர்கள் போகவில்லைஎன்பதைஇதன்மூலம் நன்கு புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

இப்போதைக்குபொதுவேட்பாளர் என்கிறயோசனையைஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூ-ட்டணியே முதலில் பொது வெளியில் வைத்ததால் அதன் தலைமையில் அந்தக் கோரிக்கையை ஏற்று தமிழ் அரசுக் கட்சியும் விக்னேஸ்வரனின் கூட்டணியும் இணைந்துகொள்ளலாம் என்பதுதான் நிலைப்பாடு. ஆக மொத்தத்தில் பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதைப் போல இங்கு யார்தலைமைஎன்கிறபிடுங்குப்பாடு முடியாத வரைக்கும் "ஒற்றுமை" வெறும் வார்த்தையில் மட்டும்தான்.

மற்றொரு கொசுறுத் தகவல், சித்தார்த்தனின் கருத்துக்கு தமிழ்த் தேசியமக்கள் முன்னணி பேச்சாளர் சுகாஸ் உடனடியாகவே பதிலடி கொடுத்திருக்கிறார். அரசு வீசிய எலும்புத்துண்டுகளுக்காக தமிழ் இனத்தைக் காட்டிக்கொடுத்த சித்தார்த்தனுக்கு ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதன் தாற்பரியம் புரியாது என்று கூறியிருக்கிறார்.

அரச கைக்கூலிகளாகச் செயற்பட்டுச் சொந்த மக்களையே சூறையாடி, போரின் இறுதிக்கட்டத்தில் போர் நிறுத்தம் ஒன்றைச் செய்தால் அது விடுதலைப் புலிகளுக்கு ஒட்சிசன் கொடுத்ததுபோலாகிவிடும் என்று கூறி, அரசு வீசிய எலும்புத்துண்டுகளுக்காகத் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த சித்தார்த்தனுக்கு ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் தார்ப்பரியம் புரியாது. தமிழ்த் தேசியமுன்னணியைவிமர்சிக்கும் தகுதியும் அவருக்குக் கிடையாது. புளொட் ஒட்டுக் குழுத் தலைவர் சித்தார்த்தன் இதனை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொது வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலின்போது தமிழ் பொது வேட்பாளர் குறித்து தமிழ் அரசுக் கட்சிஇதுவரைஎதுவிதத்தீர்மானமும் எடுக்கவில்லை.

தமிழ் பொது வேட்பாளர் குறித்து ஊடகங்களில் கருத்துக்கள் வெளிவருகின்றன. ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் வாக்களித்தாலும் தமிழர்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றன, இதனால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும்எனசிலர் கூறுகின்றனர்.

என்னைப்பொறுத்தவரை அது மிகவும் கடினமானது. குறிப்பாக தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்திற்கு மக்கள் மத்தியில் போதிய வரவேற்பு இருப்பதாக நான் காணவில்லை. தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக தமிழ் மக்கள் ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றனர். எவ்வாறாயினும் ஜனாதிபதித்தேர்தலில்வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் என்ன செய்வதுஎன்பதுதொடர்பில்கட்சிஒரு சிறந்த தீர்மாத்தை மேற்கொள்ளும் - என்றார்.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து, உலகளாவிய பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்த கூட்டத்தில் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம், வறுமை ஒழிப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் உதவித் திறன் ஆகியவை தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

அத்துடன் குறித்த கூட்டத்தில் கருத்தரங்குகள், பிராந்திய நாடுகளின் தெளிவுபடுத்தல்கள், செய்தியாளர் சந்திப்புகள், உலகப் பொருளாதாரம், சர்வதேச வளர்ச்சி மற்றும் உலகின் நிதி அமைப்பு ஆகியவற்றைமையமாகக்கொண்ட பிறநிகழ்வுகளும்நடைபெறவுள்ளன.

அமைச்சர்களின் சந்திப்புகள் மற்றும் நிகழ்வுகள் ஏப்ரல் 17- முதல் 19 வரை நடைபெறவுள்ளதோடு ஏனைய நிகழ்வுகளும் நடவடிக்கைகளும் ஏப்ரல் 15 முதல் 20 வரை நடைபெறவுள்ளன.

இலங்கையின் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, வொஷிங்டனில் நடைபெறும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்தகால கூட்டத்தில் பங்கேற்பதற்காகச் சென்றுள்ளார். கூட்டத்தில் பங்கேற்பது குறித்து அவர் தெரிவிக்கையில், அத்தியாவசிய நிதியுதவியின் அடுத்த தவணையைப் பெற்றுக் கொள்வதற்கும், விரைவான கடன்களைத் தீர்ப்பதற்கும் வழி வகுக்கும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இந்த மாநாடு கைகொடுக்கவுள்ளது - என்றார்.

அத்தோடு, பொருளாதார உறுதிப்பாடு. எதிர்கால நம்பிக்கை, நிலையான வளர்ச்சி, கடன் நிலைத் தன்மையை மீட்டெடுப்பது மற்றும், ஒவ்வொரு இலங்கையரின் நலனையும் மேம்படுத்துவதற்கும் வழிசமைக்கும்.

2022ஆம்ஆண்டிலிருந்துநாம் எதிர்கொண்ட மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியின் போது சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் சர்வதேச பங்காளிகள் வழங்கிய விலைமதிப்பற்ற ஆதரவினால் இலங்கையின் தற்போதைய நிலைத்தன்மை மற்றும் முன்னேற்றத்திற்கான பயணத்தைமேற்கொண்டுவருகிறது. சர்வதேச நாணய நிதியத்துடன் நெருக்கமாக ஈடுபடுவதுடன், எமது பங்காளிகளுடன் பரந்த சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கு பங்களிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

## விக்டோரியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் 37வயதான நபரின் சடலம் மட்டுமே உடனடியாக மீட்கப்பட்டது. ஏனைய சடலங்களைத் தேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கச்சதீவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் நடைபெற்றபோது இந்த விடயம்சம்பந்தமாகபேசப்பட்டாலும் தற்போது போன்று பிரதமர் மோடி முதல் அனைவரும் இந்த விடயம் பற்றி அதிகமாகப் பேசியதில்லை.

இவ்வாறான நிலையில், அங்கு தேர்தல் நிறைவடைந்ததன் பின்னரும்கச்சதீவைமீளப்பெறுவது தொடர்பில் பேசப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது. அதேநேரம், கச்சதீவினை இந்தியா மீளப்பெறும் என்று நான் கருதவில்லை. ஒருவேளை அவ்விதமான நடவடிக்கைகளைஇந்தியாமுன்னெடுத்தால்அதற்குநாம்எதிர்ப்புக்களை வெளியிடுவோம் என்றார்.

## கச்சதீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும், தமிழ்நாட்டு மக்களும் அறிந்துள்ளனர். தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் உள்ளகத்தில் ஒரு நிலைப்பாட்டையும்நாடாளுமன்றம் உள்ளிட்ட பொதுவெளியில் பிறிதொரு நிலைப்பாட்டையும் கொண்டுள்ளனர்.

திராவிடமுன்னேற்றக்கழகமும், காங்கிரஸ் கட்சியும் கச்சதீவினை தாரைவார்த்துள்ளன. எமது மக்களைஅந்தஇரண்டுகட்சிகளுமே வஞ்சிக்கின்றன.

எமது நாட்டு மீனவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. உரிமைகள் மீறப்பட்டுள்ளன. அது தொடர்பில் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும். தற்போதைய நிலையில் உண்மை வெளிப்பட்டுள்ளது - என்றார்.

## 24 மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவர் காயமடைந்தனர்.

அம்பலாந்தோட்டைப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு இருவர் காயமடைந்துள்ளனர்.

மாத்தறையில் மோட்டார் சைக்களில்பயணித்தஒருவர்வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையால் விபத்துக்குள்ளாகிஉயிரிழந்துள்ளார் - என்றார்.

## நாணய நிதியத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக் கைகள் எடுக்கப்படும்.

நாம் வங்குரோத்து நிலைமையில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கும் தலைமையை தெரிவுசெய்யப் போகின்றோமாஇல்லைநாட்டையும் மக்களையும் மீண்டும் மோசமான நிலைமைக்குள் கொண்டு செல்லப்போகும் தலைமையைத் தெரிவு செய்யப்போகின்றோமா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

நாம் ஆட்சிப்பொறுப்பினை ஏற்கின்றபோது, சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடு மீண்டும் சீர் செய்யப்பட்டு மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் மாற்றியமைக்கப்படும் என்றார்.

## கல்முனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணக்காளர்ஒருவரைநியமிக்குமாறு கல்முனைவடக்குபிரதேசசெயலகப் பகுதி மக்கள் பல தசாப்தங்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் அவ்வாறே நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம். இருந்தும் கணக்காளர் நியமனம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

காலங்காலமாக எமது கோரிக்கைகள் மதிக்கப்படாத நிலையில்,கல்முனைவடக்குபிரதேச செயலகத்தை உப காரியாலயமாக தரமிறக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உப காரியாலயமாக தரம் தாழ்த்துவதற்கான நோக்கத்தினாலும், கல்முனை தெற்கு பிரதேச செயலாளரின் ஜனநாயக விரோத மற்றும் சட்ட விரோதமான செயற்பாடுகளினாலும் தமிழ், முஸ்லிம்சமூகங்களுக்குஇடையில் முறுகல் நிலை உருவாகியுள்ளது.

கல்முனை தெற்கு பிரதேச செயலகச்செயற்பாடுகளுக்கு உரிய அதிகாரிகள் அனுசரணையாக செயற்படுவதால் தமிழ் சமூகம் மத்தியில் அச்சமும் பதற்றமும் அதிகரித்துள்ளது. கல்முனைவடக்கு பிரதேசத்தில் உள்ள 29 கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் தமிழ்மக்கள், கணக்காளர்ஒருவரை நியமிக்குமாறுகோரியும், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமிறக்குவதை நிறுத்துமாறும் கோரியும் தொடர்ச்சியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமைதியான போராட்டத்தின் மூலம் இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அவர்கள் தொடர்ந்து முயற்சித்து வந்த போதிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவர்கள் 20 நாட்களைக் கடந்து போராட்டம் நடத்தி வரும் நிலையில், எந்தவொரு அரச அதிகாரியும் அங்கு செல்லவில்லைஅல்லதுஅவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைவருத்தத்துடன்தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலைமையைச் சீர்செய்ய உடனடியாகதாங்கள்தலையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் வினைத்திறனான அரச சேவைகளுக்கான அணுகல் இல்லாமை, முறையான நிர்வாக ஆதரவைப் பெறுவதற்கான அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதைப் பிரதிபலிக்கிறது. இவ்விடயத்தில் தாங்கள் உடனடி கவனம் செலுத்துமாறும், கல்முனைவடக்கில்வசிப்பவர்களின் குறைகளுக்கு முன்னுரிமை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். எங்கள் சமூகத்தின் நல்வாழ்வையும் செழிப்பையும் உறுதி செய்வதில் உங்கள் தலையீடு முக்கியமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை வடக்கு பிரதேச தமிழ் மக்கள் நடத்திய கறுப்பு சித்திரைப் போராட்டம்








தங்கள் பிரதேச செயலகத்தின் நிர்வாக நடைமுறைகளுக்கு இடையீடு செய்யவேண்டாம் எனவும் தங்களுக்கான அதிகாரங்களை சுயாதீனப்படுத்தக் கோரியும் தொடங்கப்பட்ட போராட்டத்தின் 21 ஆவது நாளான ஞாயிற்றுக்கிழமை கறுப்பு சித்திரை தினமாக மோட்டார் சைக்கிள் ஊர்வலம் நடத்தப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இதுவரை எந்தவித தீர்வும் கிடைக்காத நிலையில் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கறுப்பு சித்திரை புது வருடமாக குறித்த பிரதேச செயலகத்திற்குள் இருக்கின்ற ஸ்ரீ வர சித்தி விநாயகர் ஆலயத்தின் முன்பாக பொங்கல் பொங்கும் நிகழ்வு ஆரம்பமாகி மருத்து நீர் தேய்த்து அந்த இடத்திலே ஒருவர் நீராடியதோடு இது எங்களுடைய மத கடமை அதனால் அதை நிறைவேற்றி இருக்கிறோம் இருந்தாலும் இது எங்களுக்கு கறுப்பு சித்திரை அதனால் நாங்கள் அதை கொண்டாடப் போவதில்லை என்று கூறியிருந்தனர்.

மேலும் அந்த இடத்திற்கு வருகை தந்திருந்த கல்முனை பொலிசார் இந்த நிகழ்வுகளிலே கலந்து கொள்ள வருகை தந்திருந்த இளைஞர்களில் தாமோதரம் பிரதீவன், புஷ்பராஜ் துஷாநந்தன், அருள்ஞானமூர்த்தி டிலான்சன் ஆகிய மூன்று நபர்களுக்கு நீதிமன்ற தடை உத்தரவைக் கொண்டு வந்து வழங்கியிருந்ததோடு அவர்கள் போராட்ட களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு இருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து அந்த இடத்திலே கூடிய இளைஞர்கள் போக்குவரத்துக்கு எந்த இடையூறுகளும் இன்றி யாருக்கும் எந்த தொந்தரவுகளோ தொல்லைகளோ இன்றி மோட்டார் சைக்கிள்களிலே கறுப்பு ஆடைகள் கறுப்பு கொடிகளுடன் பிரதேச செயலகத்தின் முன்பாக ஆரம்பமாகி நற்பிட்டிமுனை ,சேனைக்குடியிருப்பு துறைவந்தியமேடு ,பெரியநீலாவனை ,மருதமுனை, பாண்டிருப்பு ஊடாக கல்முனை ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்திற்கு சென்று அங்கிருந்து மீண்டும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை வந்தடைந்தனர்.

இதன்போது ஊர்வலதாரர்களை தமிழர் கலாசார முறைப்படியாக பறை இசை ஒலிக்கப்பட்டு பறை வாத்தியங்களோடு அனைவரும் வரவேற்கப்பட்டு பிரதேச செயலகத்தின் முன்பாக அழைத்துவரப்பட்டு ஆலயத்திலே பூஜை வழிபாடுகளில் அனைவரும் ஈடுபட்டு அதனைத் தொடர்ந்து



தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (05)

## இராட்டினம் உடைந்து விழுந்ததில் ஓட்டமாவடியில் சிறுவன் காயம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, ஓட்டமாவடியிலுள்ள சிறுவர் பூங்காவில் சிறுவர்கள் அமர்ந்து விளையாடும் சுழலும் இராட்டினம் உடைந்து விழுந்ததால் படுகாயமடைந்த நிலையில் சிறுவன் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஓட்டமாவடி பிரதேச சபையின் பராமரிப்பில கீழ் இயங்கிவரும் இச்சிறுவர் பூங்காவில் நோன்பு பெருநாளையொட்டி பெரும் தொகையில் சிறுவர் பூங்காவில் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் சிறுவர்கள் கலந்து கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத்; தெரிவிக்கப் படுகின்றது.

(05)

## அஷ்ஹரியன்ஸ் இளைஞர் அமைப்பின் வருட பூர்த்தியை முன்னிட்டு மேலங்கி



(தில்சாத் பர்வீஸ்)

அஷ்ஹரியன்ஸ்இளைஞர்நண்பர்கள்அமைப்பின் 4 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மேலங்கி அறிமுக நிகழ்வு சனிக்கிழமை தனியார் கல்வி நிறுவனமொன்றில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதீதியாக திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸின்பிரதிதலைவருமான எம்.ஐ.எம்.மன்சூரும் அதீதிகளாக ஐ.கே.கோல்ட் ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சியான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நளீம் மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியரும் சட்டக் கல்லூரி மாணவனுமான ஹாதிக் இப்ராஹிம், அஷ்ஹரியன்ஸ் சமூக சேவை அமைப்பின் ஆலோசகர்களும் ஆசிரியர்களுமான சியாட், அஷ்ரப் (பலாஹி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் கடந்த 4 வருடங்களில் கடந்து வந்த பாதை என்ற அடிப்படை முன் மொழிவொன்றின்றை அமைப்பின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.எம்.ஹரீஸ் நிகழ்த்தியிருந்தார்.

தொடர்ந்தும்வருகைதந்திருந்தஅதீதிகளினுடைய உரையில் அமைப்புக்கு பல ஆலோசனைகளையும் வழங்கிஇருந்தமைகுறிப்பிடத்தக்கது.தந்திருந்தது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலை நம்பலாமா?

எதிர்வரும் அரசுத் தலைவர் தேர்தலில் நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிட உள்ளார். அவரே மீண்டும் அரசுத் தலைவராக வேண்டும் என்பது எனது நிலைப்பாடு அதற்குப் பல காரணங்கள் உண்டு.

கடந்தகாலங்களில்ரணில்விக்கிரமசிங்கஎவ்வாறான நிலைப்பாட்டில்இருந்தார்என்பதுமுக்கியமல்ல. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு விடயங்களை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான விருப்பம் தற்போது அவரிடம் காணப்படுகிறது.

அது மட்டுமல்லாது தற்போதைய காலச்சூழலில் நாட்டைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றக்கூடிய தலைமைத்துவ ஆளுமையும் அவரிடம் உள்ளது.

அரசியல் ரீதியில் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கான தீர்வினை முன்வைக்க மாட்டார், அவரை எவ்வாறு நம்புவது என சிலர் சிந்திக்கின்றனர். ரணிலை நம்பாவிட்டால் பரவாயில்லை, என்னை நம்புங்கள்; நான் செய்விப்பேன் என்று கூறுகின்றேன்.

இப்படியெல்லாம்சொல்லியிருக்கிறார்மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களுக்குத் தீர்வைத் த–ருவார் என்று நம்புவோர் பட்டயலில் கடைசியாக இணைந்திருக்கக்கூடியவராக அவரைப் பார்க்க முடிகின்றது.

2005 மைத்திரிபால சிறிசேனவை அரசுத் தலைவராக்கியஅரசியல்நகர்வுகளில்விக்கிரமசிங்கவோடு தோளோடு தோள் நின்று பணியாற்றியவர்கள் இருவர். அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுமே அந்த இருவரும். கடைசி வரைக்கும் அவர்களை நம்ப வைத்தே காலத்தை இழுத்தடித்த ரணில் விக்கிரமசிங்க அந்த ஆட்சிக் காலத்தில் பன்னாட்டுச் சமூகத்தை மட்டுமல்லாது தன்னை நம்பிய தமிழ்த் தலைவர்களையும் ஏமாற்றினார்.

அதன் பின்னர் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்கிற திட்டத்தில் முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரன் ரணில் விக்கிரமசிங்கவை முழுமையாக நம்பிப் பணியாற்றினார். மாகாணசபைகளைப்பலப்படுத்தரணில்உதவுவார்என்று நம்பி விக்னேஸ்வரன் மேற்கொண்ட முயற்சிகளுக்கு கடைசிவரை நம்பிக்கையூட்டிய ரணில், பின்னர் அதில் ஒரேயொரு நகர்வைக்கூட மேற்கொள்ளாமல் ஏமாற்றினார்.

இப்போதுஅந்தவரிசையில்ரணில்விக்கிரமசிங்கவை நம்புவோர் பட்டியலில் இடம்பிடித்திருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு விடயத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்லும்விருப்பம்ரணில்விக்கிரமசிங்கவிடம் இருப்பதாக அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அமைச்சர் சொல்வதைப்போலவே அத்தகைய விருப்பம் ரணிலுக்கு இருக்கக்கூடும். ஆனால் கேள்வியெல்லாம் அவராகவே அரசியலில் இருந்து ஒதுங்கும் வரைக்கும் அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான எந்தவொரு நடவடிக்கையையாவது ரணில் மேற்கொள்வாரா என்பதுதான். அவரது வரலாறு முழுவதும் அதற்குச் சாத்தியமே இல்லை என்றுதான் பதில் கூறுகின்றது.

இருந்தாலும், தன்னால் அதனைச் செய்ய வைக்க முடியும் என்று இன்னும் 5 வருடங்களில் அரசியலை விட்டு விலகப்போகும் நிலையில் சொல்கிறார் அமைச்சர். அவரது அரசியல் பயணத்தில் கொழும்பு ஆட்சியாளர்களுடன்சேர்ந்துபோனஇணக்கஅரசியலின் மூலம் அரசியல் தீர்வு விடயத்தில் எதனையும் சாதிக்க முடிந்ததில்லை என்கிற உண்மை தெரிந்தபோதும் கடைசிக் காலத்தில் ரணிலை நம்பப் புறப்பட்டிருக்கும் அமைச்சரின் ஆசை நிறைவேறினால் தமிழர்களுக்கும் மகிழ்ச்சிதான்.

# கற்பகதரு என்னும் அற்புதம்

# இனிக்கும் பனை

அங்கம் –37



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

சுவையினைத்தருகின்றபதனீரைக்காய்ச்சுவதன் மூலமாக இன்னும் சுவையினைப் பயக்கும் பல கிடை க்கின்றன என்பது மனமிருத்த வேண்டிய முக்கிய கருத்தாகும். பனையிலிருந்து இறக்கிய நிலையில் குளிர்மையாக இருந்து குடிக்கும் சுவையான பானமாக அமைகின்ற பதனீர் ; அடுப்பில் வைத்துக் கொதிக் கவைத்து ஆறவி ட்ட நிலையிலும் யாவருக்கும் நல்ல இனிப்பான சுவையினை வழங்கியே வருகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.பதனீர்என்னும்பெயரினினுக்கு ஏற்றாற் போன்று அது என்றுமே நல்ல பதமாகவும், இதமாகவுமே ஆகியே அமைகிறது.



பனங்கட்டி என்று சொல்லும் பொழுதே நாவெல்லாம் ஊறுகிறதல்லவா ? பனங்கட்டிதான் எங்களின் சொந்தமான இனிப்பாக விளங்கி இருக்கிறது. எங்களின் வாழ்வியலோடு இணைந்து நிற்கும் கற்பக

தருவாம்பனையின்கொடைகளில்பனங்கட்டியும் முக்கிய இடத்தினை வகிக்கிறது என்பதை மறுத்து ரைத்து விடவே முடியாது எனலாம்.பனங்கட்டியாய், பனை வெல்லமாய், பனஞ்சீனியாய், பனங்கற் கண் டாய், பனங்காடியாய் என்றெல்லாம் கற்பகதரு எமக்கெல்லாம் வழங்கும் நிலையில் பதனீர் என்னும் மூலத்தையே அளித்து நிற்ப தைக் கட்டாயம் மனத்திலிருத்துதல் வேண்டும்.

பதனீரானதுஇனிப்பாய்பதமாய்இருப்பதற்குத்தான் அதனை எடுக்கும் பாத்திரங்களுக்குள் சுண்ணாம்பு பூசப்பட்டது. அந்தச்சுண்ணாம்புபூசப்படுவதால்த்தான் பதனீர் புளிக்காமல் இருக்கிறது. பாதுகாப்பதற்குப் பூசப்படும்சுண்ணாம்பினைத்தரமற்றதாகப்பூசிவிடும் நிலையில் பதனீர் கெட்டுப் போய்விடுகிறது என் றும் அறிய முடிகிறது. அதேநேரம் சுண்ணாப்பினை அளவுக்கு அதிகமாகப் பூசுவதாலும் பதனீர் கெட்டுப் போவதற்கு வாய்ப்பு உண்டாகிறதாம் என்றும் அறிந்திடக்கூடியதாக இருக்கிறது. சுண்ணாம்பு பூசுவதால் த்தான் பதனீர் பக்குவமாய் கிடைக்கிறது. ஆனால்அந்தச்சுண்ணாம்பேபதனீரினைக்காய்ச்சிப் பனங் கட்டி செய்யும் வேளை - பனங்கட்டியில் காரத்தன்மையினையும், கருநிறத்தையும் கொடுப்பதோடு சுவையி னையும் கெடுத்து விடவும் கூடியதாக இருக்கிறதாம் என்பது முக்கிய கருத்தாகும். இதனால் பதனீரில் இருக்கும் சுண்ணாம்புத் தன்மையினைநீக்குவது–பனங்கட்டிஉருவாக்கத்தில் முக்கியமாகிறது. அதனால் பதனீ ரைக் காய்ச்சும் பொழுதுசுண்ணாம்பின்தாக்கத்தைஅகற்றுவதற்காக பொஸ்போரிக் அமிலம் அல் லது சிற்றிக் அமிலம் பயன்படுதப்படும் நிலை ஏற்படுகிறது.

பனங்கட்டி என்பது நீண்ட வரலாற்றினைக் கொண்டதாகவே இருக்கிறது. தமிழ் நாட்டிலும் பனையுண்டு. அங்கும் பதனீர் எடுக்கப்படுகிறது. அங்கும் பனங்கட்டியும் செய்யப்படுகிறது. பனங்கட்டி செய்வது என்பது குடிசைக் கைத்தொழிலாகவே ஆரம்பமாகியது. பின்னர்தான் அதில் நவீனங்கள் புகுந்து கொண்டன. இலங்கையைப்பொறுத்தளவில் பனங்கட்டி செய்யும் தொழிலானது குறிப்பாக யாழ்ப்பாணமாவட்டத்திலேமூவாயிரம்ஆண்டுகளுக்கு முன்னராகவே ஆரம்பிக்கப்ப ட்டிருக்கிறது என்று வரலாற்றால் அறியக்கூடி யதாகவே இருக்கிறது என்னும் செய்தியை யாவரும் மனமிருத்திவது அவசியமாகும்.குடிசைக் கைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்ட பனங் கட்டித் தொழிலானது சிறப்புறவே நடைபெற்றதாகவும் அறியமுடி கிறது. அதுமட்டுமல்ல இந்தியாவுக்கும், ஏனைய நாடுகளுக்குமே ஏற்றுமதியும் செய்யப்ப ட்டதாம். இலங்கையின்ஏனையபகுதிகளுக்கும்அனுப்பப்பட்ட தாம். குடிசைக் கைத்தொழிலாக இருந்தும் மிகவும் சிறப் பாகவே அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பனங்கட்டி உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என் னும் செய்தியா னது எமக்கெல்லாம் பெருமையாய் இருக்கிறதல்லவா!

பாரம்பரிய முறையில் பதனீரை வடிகட்டப் பன்னாடைகளும், துணிகளும் பயன்படுத்தப்பட்டன. பின்னர் அரிதட்டும் பயன்பாட்டுக்கு வந்திருக்கிறது. பனையின்பாளையிலிருந்துபதனீர்எடுக்கப்படுவதால் அதில் தூசிகள், துரும்புகள், பனம்பூக்கள், தேனீக்கள், பாளைச்சோர்வைகள்,கலக்கும்நிலைதவிர்க்கமுடியாத தாகும். இவைகள் அனைத்தையும் அகற்றிய பின்னர்தான் காய்ச்சுவதற்கு பதனீர் பதமாக வந்து நிற் கும். இவைகள் அனைத்துமே வடிகட்டப்படுவதால் அகற்றப்பட்டு - நல்ல சுத்தமான பதனீர் காய்ச்சுப் பாத் திரத்தில் ஊற்றப்படுகிறது.

ஆரம்ப காலங்களில் வீடுகளில் சாதாரண அடுப்புகளில் மண்பானைகளில் வைத்தே காய்ச்சப்பட்டது. பின்னர் அலுமினியம் பாத்திரம், தாச்சிச்சட்டிகள், பதனீர் காய்ச்சுப் பாத்திரங்களாக அமைந்து விட்டன. வீட்டிலே பதனீரை அடுப்பில் வைத்துச் சூடாக்கும் பொழுது அது பொங்கி வருவது என்பது நடந்தபடியே தான் இருக்கும். அப்படி வருகின்ற வேளை அதனைத்தணிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் தேங்காய் எண்ணையினையும், தமிழகத்தில் ஆமணக்கு விதையின் மாவினையும் பயன்படுத்தினார்கள். இவை களைக் கொதித்துப்



பொங்கி வருகின்ற பதனீரில் போடுவதால் அதன் ஆவேசம் அடங்கி விடுகி றதாம். இல்லாவிட்டால் பொங்கி வீணாகிவிடும் நிலை ஏற்பட்டு விடும். அதனைத் தடுப்பதற்கு அப்பொழுது கையாளப்பட்ட கைத்தொழில் நுட்பமாகவும் இதனைக் கொள்ளலாம் அல்லவா ! பொங்கி வரும் பதனீர் பாத்திரத்துக்கு அருகிலிருந்து அகப்பையினைப் பயன்ப டுத்தியும் சமாளிப்பார்களாம் என்றும் அறியமுடி கிறது.

கொதித்துவரும் பதனீர் சரியான பதத்தில் வந்தவுடன் அதனை இறக்கி விடுவார்கள். அது பாணியாகவே இருக்கும். அதனை உரிய பாத்திரத்தில் சேமித்து வைப்பார்கள். இந்தப் பாணியைக் கொண்டுதான் பனங் கட்டி செய் யப்படுகிறது.

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# கற்பகதரு என்னும் அற்புதம் இனிக்கும் பனை

4ம் பக்க தொடர்ச்சி...........



பனங்கட்டி செய்வதற்குத் தேவையான பாணியை எடுத்து விட்டு மிச்சமுள்ள பாணி ' பாணியாகவே ' விற்பனையும் செய்யப்பட்டது. அதனையும் பலர் நாடி நின்றனர் என் பதும் நோக்க த்தக்கதாகும். இவ்வாறு பெறப்படும் பாணியினைப் புகையிலையினைப் பதப்படுத்துவதற்கும் பயன் படுத் தினார்கள். யாழ்மண்ணின் மக்கள் சிலர் பதனீர் பாணியைக் கொண்டு குடிசைக் கைத்தொழிலாகப் பனங் கட்டியை செய்து விற்பனையில் ஈடுபட் டார்கள். அது தான் அவர்களின் வாழ்வாதாரமான தொழிலாகவும் அமைந்திருந்தது என்பது கருத்திருத்த வேண்டியதேயாகும்.

பதனீர் பாணியினை உடனடியாக பனங்கட்டிக்குப் பயன்படுத்திவிட இயலாது. அதனை பனங்கட்டிப் பதத்துக்கு மீண்டும் ஒருதடவை வரு வதற்காகச் சூடாக்க வேண்டி வருகிறது. சூடாகிவரும் பாணியின் இறுக்கத்தை அவதானித்து பின்னர் அதனை இறக்கி – பனை ஓலைக் குட்டான்களிலோ அல்லது அல்லது தங்களுக்குப் பொருத்தமான விதத்திலோ அந்தப் பதமான பாகினை விடுவார்கள். அப்படி விடப்பட்ட அந் தப் பாகு ஏறக்குறைய பத்து அல்லது பதினைந்து நிமிடங்களில் இறுகிவிடும். இறுகிய நிலையில் நமக் குக் கிடைப்பதைத்தான் ' பனங்கட்டி ' என்று யாழ்ப்பாணத்தில் அழைக்கின்றோம். தமிழ் நாட்டில் ' பனை வெல்லம் ' என்று அழைக்கிறார்கள். அதே வேளை ' கருப்பட்டி ' என்னும் பெயராலும் அழைக்கப்படு கிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.

பனை ஓலைகளால் எவ்வளவு சிறிய அளவில் செய்ய முடியுமோ அந்தளவில் குட்டான்கள் செய்யப்ப ட்டன. அதேவேளை பெரிய அளவிலும் குட்டான்கள் செய்யப்பட்டன. பெரிய குட்டான்களில் வருகின்ற பனங்கட்டியை ' ஆனைப் பனங்குட்டான் ' என்று பெயரிட்டு அதற்கு பெரிய மதிப்புக் கொடுப்பதும் யாழ் மண்ணில் இருந்திருக்கிறது என்பதைக் கட்டாயம் குறிப்பிட்டே ஆக வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் போகிறவர்கள் நிச்சயமாகப் பனங் குட்டானைத் தங்களுடன் எடுத்துக் கொண்டே செல்லு வார்கள். அதுவும் ஆனைப் பனங்குட்டான் நிச்சயம் இடம் பெற்றிருக்கும். யாழ்ப்பாணத்துப் பனங்குட்டா னுக்குக் கிழக்குமாகாணத்தில் பெரு வரவேற்பு இருந்தது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் புகையிலை யினை எடுத்துக்கொண்டு கிழக்கு மாகாணம் வரும்பொழுது பனங்குட்டானையும் உடன் கொண்டு வருவார்கள். புகையிலை வியாபாரம் செய்வதற்கு எப்பொழுது யாழ்ப்பாண வியாபாரிகள் வருவார்கள் என்று எதிர்பார்த்த ஒரு காலமும் இருந்தது கிழக்கு மாகாணத்தில் என்பதை நான் அறிவேன். என்னுடைய சிறிய வயதில் கிழக்கு மாகாணத்தில் வாழும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது புகையிலை கொண்டு வரு கின்ற யாழ்ப்பாண முதலாளிகள் சிலர் எங்கள் வீட்டில் தங்கியது இன்னுமே நினைவில் இருக்கிறது. அவர்கள் வரும் பொழுது பனங்குட்டான்களையும் கட்டாயம் உடன் கொண்டு வருவார்கள். அவர்கள் வாகனங்களில் வந்து இறங்கியதும் யாழ்ப்பாணத்துப் பனங்குட்டானை வாங்குவதற்கென்று ஒரு கூட் டமே அங்கே கூடிவிடும். அப்படிக் கூடும் கூட்டத்தார் ஆனைப் பனங் குட்டானைக் கண்டதும் அவர்களின் ஆனந்தத்துக்கு அளவே இருக்காது என்றுதான் சொல்ல வேண்டும்.

பனங்கட்டி என்றதும் புலவர்கள் வந்து நிற்பார்கள். நாங்கள் நாவினால் பனங்கட்டியைச் சுவைப்போம். ஆனால் புலவர்களோ தங்களின் அகத்தினால் சுவைத்து அதனை உணர்வுடன் கவிதைகளாக வெளிப்ப டுத்தி நிற்பார்கள். அதனால் புலவர் போற்றும் பனங்கட்டி என்றும் எடுக்கலாம் அல்லவா !

தாலமெனும் பனையாற் பிறந்த வென்னைத்
தம்பி கங்கச்சி பனங்கட்டி யென்பார்
தானியம் யாவுக்கும் மாவுக்குமே யேனைத்
தாங்கியருங் காலத்தில் வாங்கியுண்பீர்

கஞ்சியொடு கூழ்பிட்டுக் களிவகைக்
குதவுவேன் கனத்த பலகார மெல்லாம்
தஞ்சமொடு எந்தனைச் சேர்த்துண்ண
மிகவுருசி சமிபாடு மதிகமுண்டு
பஞ்சமது என்கிறீர் பனை தென்னை
யுங்களுடை பக்கத்திலே யிருக்க
வஞ்சமதை விட்டு வழி தேடிடும்
விதேசியூண் வாய்க்குமோ எந்தநாளும்

சீனியிலும் வெகு மானிய தாகவே
திகழ்ந்து திரிவதல்லாத சேதமின்றி
ஹானிதரும் சலரோகம் போலும் பிணி
யானதற் கிடங்கொடேன் நானேயறி

கடித்துக் குடிக்கவும் கரைத்துப் பருகவும் கண்ட கண்ட
படிக்குப் பலகார பட்சணம் பற்பல பண்ணுதற்கு
இடித்துத் துவைத்து எவ்விதத் தீனுடனும் உண்ணுதற்கும்
படிக்குட் சிறந்தது பல்நோய் தவிர்க்கும் பனங்கட்டியே

நாங்கள் பனங்கட்டியைப் பார்ப்பதற்கும் , சுவைப்பதற்கும் , மேலாக இந்தப் பாடலைத் தந்த யாழ்ப்பா ணத்துப் புலவர் பொன்னாலை கிருஷ்ணபிள்ளை பனங்கட்டியைப் பார்த்த விதந்தான் புலவர் போற்றும் பனங்கட்டி என்னும் நிலைக்குப் பொருத்தமாய் அமைகிறதல்லவா !

யாழ்ப்பாணத்தில் பனங்கட்டி செய்வது குடிசைக் கைத்தொழிலாகப் பல இடங்களில் நடைபெற்று வந்திருக்கிறது. அந்தவகையில் – வடமராட்சி, வலிகாமம் வடக்கு, பச்சிலைப் பள்ளி, மன்னார் ஆகிய இடங்கள் வந்து அமைகின்றன. குடிசைக் கைத்தொழிலாகப் பனங்கட்டி செய்யும் பொழுது அங்கு ஒழுங்கான சுகாதார முறைகள் பேணப்படாதிருந்திருக்கிறது என்றும் அறியக்கிடக்கிறது. என்றாலும் அப்படியான தொழிலில் ஈடுபட்டவர்களின் வாழ்வாதரத்துக்கு அதுவே துணையாக இருந்திருந்திருக்கிறது என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதேயாகும்.

யாழ்ப்பாணத்தில் குடிசைக் கைத்தொழிலாக நடை பெற்றதுபோலவே தமிழ் நாட்டிலும் நடைபெற்றிருக் கிறது. ஆண்களும் , பெண்களும் இத்தொழில் ஈடு பட்டு தங்களின் வருவாயினுக்கு உரிய ஒரு வழியா கவே பக்குவமாய் பார்த்திருக்கின்றார்கள் என்று அறிந்திடக்கூடியதாக இருக்கிறது. தமிழகத்தில் தூத் துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஆகிய தென் மாவட்டங்களிலும், வேலூர்,சேலம் உள்ளிட்ட வடமாவட்டங்களிலும்,பனங்கட்டியானது முக்கிய குடிசைக் கைத்தொழிலாக விளங்கியிருக்கிறது. திருநெல்வேலிக்கு அருகில் இருக்கின்ற உடன்குடி என்னும் ஊரிலும், தூத்துக்குடிக்கு அருகிலுள்ள வேம்பார் என்னும் ஊரிலும் பனங்கட்டி பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது என்பது நோக்கத்தது.

திருநெல்வேலிக்கு அருகில் இருக்கும் உடன்குடி பகுதியை சுற்றி நிறையவே பனைகள் காணப்படுகின் றன. இங்குள்ளவர்கள் பனங்கட்டி உற்பத்தியினைப் பெருமளவில் செய்து வருகிறார்கள். தமிழ் நாட்டிலே பல இடங்களில் பனங்கட்டி செய்யப்பட்டாலும் உடன்குடியில் செய்யப்படும் பனங்கட்டி தனியான இடத்தினைப் பெற்றுவிட்டது. இதன் சுவை மற்றைய இட ங்களில் செய்யும் பனங்கட்டி களைவிடச் சிறப்பாக இருப்பதாக மக்கள் சொல்லுகிறார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் உடன்குடி பனங்கட் டிக்கு நல்ல சந்தை வாய்ப்பும் வாய்த்திருக்கிறதாம்.

மதுரை மாவட்டத்தில் – பேரையூர் வட்டாரத்திலுள்ள மேலைப்பட்டி, லட்சுமியபுரம், தாதாங்குளம், தும்மநாயகன்பட்டி, மற்றும் அதன் அருகிலுள்ள சில கிராமங்களையும் சேர்ந்த சுமார் இராண்டாயிரம் பேர் தங்களின் குலத் தொழிலாகவே ஆக்கி குடிசைக்கைத் தொழிலாகவே பனங்கட்டி செய்துவருகிறார்கள். இப்பகுதிகளில் ஏறக்குறைய நாற்பதாயிரம் பனைகள் இருக்கின் றன. இங்குள்ளவர்கள் பனைகளைக் குத்தகைக்கு எடுத்தே பதனீரைப் பெற் று பனங்கட்டி செய்வதில் ஈடுபடுகிறார்கள் என்று அறியக்கூடியதாக இருக்கிறது. இவர்களுக்குத் தகுந்த உதவிகள் கிடக்காதிருக்கிறது என்றும் செய்திகள் வாயிலாக அறிய முடிகிறது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ராமகிருஷ்ண மிஷன் சிறார்களுக்கு ஜனாதிபதியின் புத்தாண்டுப் பரிசில்

## மட்டக்களப்பில் வழங்கப்பட்டன



(வி.ரி. சகாதேவராஜா)

தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கல்லடி இராமகிருஷ்ணபுரத்தில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் சிறுமியர் இல்ல மாணவர்களுக்கு புத்தாண்டு பரிசு வழங்கி வைத்தார்.

இராமகிருஷ்ணமிஷன்மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் அப்பிரதேச இராணுவ அதிகாரியால் புத்தாண்டு பொதிகள் சிறுவர் சிறுமியர்களுக்கு வழங்கப்பட்டன.

நாட்டில் உள்ள 336 சிறுவர் மேம்பாட்டு நிலையங்களில் வாழும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு இந்த புத்தாண்டு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

“சிறுவர் இல்ல குழந்தைகளுக்கு புத்தாண்டு ” எனும் தொனிப்பொருளில் இது சனிக்கிழமைவழங்கப்பட்டன.



இராணுவப் பாதுகாப்பு பதவிநிலைபிரதானிஜெனரல் சவேந்திரசில்வாவின்வழிகாட்டலில்இராணுவதளபதிலெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயின் ஏற்பாட்டில் சமகாலத்தில் அனைத்து இல்ல சிறார்களுக்கும் இந்த புத்தாண்டு பரிசு வழங்கப்பட்டன. இனிப்புகள் பரிசு பொருள்கள்என்பனவழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

(05)

# தமிழ் மக்களின் திடமான அரசியலுக்கு தமிழ் பொது வேட்பாளர் மிக அவசியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்




தமிழ்அரசுக்கட்சியின்கிளிநொச்சிஅலுவலகத்தில் புதுவருட பிறப்பு கைவிசேஷம் வழங்கி வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் -

1978 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் குமார் பொன்னம்பலம் களம் இறங்கினார். தமிழர்களின் தேசிய அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக பல ஜனாதிபதித் தேர்தலில் பல ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கியிருந்தோம். ஆனால் அவர்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவில்லை. ஆதரவு அளித்த பல பேர் தோல்வியடைந்தனர்.



ஆனால் வெற்றி பெற்ற மைத்திரி உள்ளிட்டோர் தமிழ்மக்களின்அரசியல்தீர்வைபெற்றுத்தரவில்லை. இதனால்தான் நீண்ட நெடும் அனுபவத்தின் அடிப்பையில் பெரும்பாலனவர்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான கருத்து நிலவி வருகிறது

.தமிழர்களுக்கு நீதி வேண்டும், சர்வதேச விசாரணை வேண்டும் தமிழர்களுக்கு இறையாண்மை வேண்டும் என்பதை சர்வதேச ரீதியில் ஒரு செய்தியாகச் சொல்ல முடியும் எனத் தெரிவித்தார்.

கச்சத்தீவு தொடர்பாகவும் கருத்து தெரிவித் தார்.இந்தியாவின் ஆளுகைக்குள் கச்சதீவு இருந்தாலும் ஒப்பந்தத்தில் கச்சதீவு இலங்கைக்குரியது.

வடக்கு தமிழ் கடற்றொழிலாளர்கள் கச்சதீவில் தொழிலில் ஈடுபடுகின்றனர்.தமிழ் நாட்டில் இருக்கின்ற சகோதரர்கள் ஈழத்தின் தொப்புல் கொடி உறவுகள் பாதிக்க விடமாட்டார்கள் தமிழ் நாட்டில் நடைபெறும் தேர்தல் பிரசாரமே இது.

(05 - 113)



# நம்மிலிருந்து நமக்கான தேவைகளை நாமே பூர்த்தி செய்வோம்; கலந்தாய்வு





(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறைமாவட்டத்தில்1999ஆம்ஆண்டுபிறந்த ஆண்,பெண் இருபாலார்களுடைய தேவைகளை 'நம்மிலிருந்து நமக்கான தேவைகளை நாமே பூர்த்தி செய்வோம்' என்ற தூய எண்ணக்கருவுடன்



ஒரு சமத்துவத்தை மையமாக கொண்டு '99 நீ யூனியன்' உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப கட்ட கலந்துரையாடல் சனிக்கிழமை நிந்தவூரில் அமைந்துள்ள ஏ. பி பேமிலி ரெஸ்டோரண்டில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அக்கரைப்பற்று, சம்மாந்துறை, அட்டாளச்சேனை, பாலமுனையை சேர்ந்த1999ஆம்ஆண்டில்பிறந்தகுறிப்பிடப்பட்டோர் கலந்துகொண்டதுடன்,சமுதாயத்துக்குத்தேவையான கல்விநடவடிக்கைகளையும்,அடுத்ததலைமுறையின் வளர்ச்சிக்கானநடவடிக்கைகளையும், வாழ்வாதார முன்னேற்ற நடவடிக்கைகளையும் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கவுள்ளனர்.

சமுதாயத்தின் வளர்ச்சிக்கு 1999 ஆம் ஆண்டில் பிறந்த அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்குவீர்கள் என்று நம்புகிறோம் என்று தீர்மானிக்கப்பட்டது. (05)

# சுற்றுலாவிகள்; சென்ற வான் பண்டாரவளையில் விபத்து

## 6 பேர் காயம்

பண்டாரவளை-கஹகல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹப்புத்தளை பகுதியிலிருந்து பண்டாரவளை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வான் ஒன்றே வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

காலி பகுதியிலிருந்து சுற்றுலா சென்ற குழுவினர் பயணித்த வானே விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த 6 பேரும் சிகிச்சைகளுக்காக தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக பண்டார வளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டுள்ளனர் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கணித ஒலிம்பியாட்டுக்கு கல்முனை மஹ்மூத் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இம்முறை இடம்பெற்ற கிழக்கு மாகாண மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகள் பங்கேற்று கல்முனை வலயக் கல்விப் பணிமனை சார்பாக தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தரம் ஆறு பிரிவினை சேர்ந்த எம்.ஜே. அமீஹா ஷாஹ்தா, எம்.சி.ஆர். ஜீஸாரீம் ஆகியோர் மாகாண மட்ட போட்டியில் வெற்றி பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

எதிர்வரும் சனிக்கிழமை, 2024. ஏப்ரல் 20 ஆம் திகதி கொழும்பு ஆனந்தா கல்லூரியில் இடம்பெறவிருக்கின்ற

தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளதாக கல்லூரி அதிபர் ஏ.பி.நஸ்மியா சனூஸ் தெரிவித்தார். (05)

# கண்டி மாவட்ட உள்ளூராட்சி சபை உத்தியோஸ்தர்களுக்கான பயிற்சி







(அஸ்ஹர் இப்றாஹிம்)

கண்டி மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உத்தியோஸ்தர்களுக்கான ஆவண திருத்த நடைமுறைகள் பற்றி 'ஆவணப் படுத்தப்பட்ட அடையாளத்திற்கான திருத்தங்களை மேம்படுத்துதல்' தொடர்பான பயிற்சிப் பட்டறையொன்று அண்மையில் கண்டி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கொழும்பு அமெரிக்கதூதரகம் இலங்கையின் கூட்டாண்மையுடன் இலங்கையின்அமெரிக்க தூதரகத்தின் அனுசணையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் சமூகத்தின் தனிப்பட்ட நிகழ்வுகள் மற்றும்தேசியஅளவிலானமாற்றங்கள், எதிர்கொள்ளும் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன. (05)

# சமய, சமூக, பாரம்பரியத்தை பாதுகாப்பது எமது தலையாய கடமையாக மாறிவிட்டது

## சாளம்பங்கேணியில் எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு





நவீனகாலத்தில்புதுமைகள்புகுந்துபாரம்பரியங்கள் அழிந்துவரும் இந்த காலகட்டத்தில் சமய, சமூக,



பாரம்பரியங்களைப் பாதுகாக்கவேண்டியது எமது தலையாய கடமையாகும். பெருநாள் காலங்களில் பெருநாள் கொண்டாட்டங்கள் அழிந்து வழிபாடுகளில் ஈடுபட்டு, உண்டுவிட்டு தூங்கும் இளைஞர் சமுதாயத்திற்கு உடலும், உள்ளமும் ஆரோக்கியமாக பல்லின சமூக ஒற்றுமையை எடுத்துரைத்த எமது முன்னோர்களின் பெருநாள் கொண்டாட்டங்கள் மீள இந்த தலைமுறைக்கும் கொண்டுசேர்க்கவேண்டியுள்ளதுஎனஅக்கரைப்பற்று பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் தலைவருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சாளம்பங்கேணி அல்- குறைஷியா இளைஞர் கழகம் ஏற்பாடு செய்த நோன்புப்பெருநாள்விளையாட்டுவிழாவும்,பரிசளிப்பு நிகழ்விலும் பிரதம அதிதியாகக்; கலந்துகொண்ட அவர் இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

முட்டி உடைத்தல், நாட்டுக்கு குண்டு போடுதல், சங்கீத கதிரை, முட்டை மாற்றுதல், மோட்டார் சைக்கிள் ஓட்டம், சுற்று ஓட்டம் என பல சுவாரசிய விளையாட்டுக்கள் இதன்போது இடம்பெற்றன. இந்நிகழ்வில் மேலும் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஏ.ஏ. லத்திப், கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழு உறுப்பினரும், கிழக்கின் கேடயம் பொதுச்செயலாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், கிழக்கின் கேடயம் தவிசாளர் தொழிலதிபர் ஏ.கே. அமீர், மத்தியமுகாம் ஜீ.எம்.எம்.எஸ். பிரதியதிபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## யானை தாக்கி ஒருவர் வவுனியாவில் காயம்

வவுனியா, மாமடுப் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்கப்பட்டுள்ளார் என மாமடுப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டு தினமான ஞாயிற்றுக்கிழமை மாலை வவுனியா, மாமடு - கள்ளிக்குளம் வீதியில் நபர் ஒருவர் பயணித்த போது வீதியில் நின்ற யானை குறித்த நபர் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு அங்கிருந்து சென்றுள்ளது.

பின்னர் அந்த வீதியால் சென்றோர் தாக்குதலுக்குள்ளான நபரை வவுனியா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். இந்;தச் சம்பவம் தொடர்பில் மாமடுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மாமடு - கள்ளிக்குளம் வீதியில் உள்ள பல காணிகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ள போதும், அந்த வீடுகளில் பலரும் குடியிருக்காமையால் அப் பகுதி பற்றைக் காடுகளாக மாறியுள்ளதுடன், காட்டில் இருந்து வரும் யானைகள் அப் பற்றைக்; காடுகளின் ஊடாக வீதிக்கு வருகை தருவதாகவும், தினமும் அப் பகுதியில் நடமாடித் திரிவதுடன் வீதியில் செல்வோரை தாக்க முயற்சிப்பதாகவும் அப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர். (05 - 100)

## கல்வி அபிவிருத்தி கலந்துரையாடல்!



(எம்.ஏ.றமீஸ்)

கல்முனை அல்-பஹ்றியா மகா வித்தியாலத்தின் மூலம் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் பஹ்றியன் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டி சம்பந்தமாகவும், இப்பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட கலந்துரையாடல் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.பைஷல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவரும் பொறியியலாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இப்பாடசாலைச் சமூகத்தை விளையாட்டின் மூலம் ஒன்றிணைத்து ஒற்றுமை, சமாதானம், விட்டுக்கொடுப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஆண்டு தோறும் இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சபை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்யும்; பஹ்றியன் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டியை சிறப்புற நடத்துவது தொடர்பிலான இக்கலந்துரையாடலின்போது பாடசாலை அபிவிருத்திச் சபை மற்றும் பழைய மாணவர் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இச்சுற்றுப் போட்டி தொடர்பாகவும் பாடசாலை அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் கல்வி விருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவரும் பொறியியலாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் இச்சுற்றுப் போட்டியினை சிறப்புற மேற்கொள்வதற்கு பூரண அனுசரணை வழங்குவதற்கான பங்களிப்புக்களை செய்வதற்கும், பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக தாம் கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.(05)




# 'யாவருக்கும் உறையுள் – 2030' 13ஆவது வீட்டுக்கு அடிக்கல்



(தில்சாத் பர்வீஸ், எம்.வை.அமீர், நூருல் ஹூதா உமர்)

சம்மாந்துறை பிரதேசத்தில் வசிக்கும் தேவையுடைய குடும்பங்களின் உறையுள் தேவைக்காக ஓசிடி அமைப்பின் தலைவரின் எண்ணக்கருவில் உருவான 'யாவருக்கும் உறையுள் - 2030' எனும் தொனிப்பொருளில் நிர்மானிக்கப்பட்டுள்ள13ஆவதுவீட்டுக்கானஅடிக்கல் நடும் நிகழ்வு சனிக்கிழமை மலையடிக்கிராமம் 4 அல்-அக்ஷாபள்ளிவாசல்மஹல்லாக்குட்பட்டபகுதியில் அமைப்பின் செயலாளர் சரோஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த அமைப்பின் தலைவரும், விஞ்ஞான முதுமானியும், சமூக சேவகருமான அஸ்மி யாஸீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து அடிக்கல் நாட்டிவைத்தார்.





இந்நிகழ்வில்தேசியநீர்வழங்கல்வடிகாலமைப்பு சபையின் பிரதம பொறியியலாளர் நஸீர், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் றியாஸ், தொழிநுட்ப உத்தியோகத்தர்மொஹம்மட்தம்பி, நூர்பள்ளிவாசல் தலைவரும், அமைப்பின் ஆலோசகருமான அல்-ஹாபிழ் றிப்கான், சம்ஸ்மத்திய கல்லூரியின் உப அதிபர் பர்ஸான், கணக்காளர் ஜிப்ரி, அஸ்ஸமா வித்தியாலய அதிபர் அபூபக்கர், ஜனாதிபதியின் இளைஞர் விவகார அமைப்பின் உறுப்பினர் பாஸித், ஓசிடி அமைப்பின் செயலாளர் பெரோஸ் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

# யாழ். நகரின் சுகாதார நிலமைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் கவனம்



யாழ் நகரப்பகுதியின் சுகாதார நிலைமைகள் தொடர்பில் அவதானிப்பதற்காக கண்காணிப்பு விஜயம் ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்தார்.

புது வருடப் பிறப்பு தினமான ஞாயிற்றுக்கிழமை காலை குறித்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

யாழ் நகரின் தூய்மை பராமரிப்பு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்கள் பலதரப்பட்டவர்களிடமிருந்துமுன்வைக்கப்பட்டுவரும் நிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்த கள விஜயம் அமைத்துள்ளது.

குறிப்பாக யாழ் நகரின் மையப்பகுதி மற்றும் புதிய மாநகரசபை கட்டட வளாகம் அதனை அண்டிய சுற்றுவட்டத்தின் நீர் வடிந்தோடும் வடிகான்கள் உள்ளிட்டவற்றை பார்வையிட்ட அமைச்சர் அவற்றைதூய்மையாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல்; கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் சாவு

இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொடை – பெட்டிகல பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் பெட்டிகலவத்தையைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரு குழுக்கள் இடையே நிலவிய முரண்பாட்டின் விளைவாக இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# புத்தாண்டு தினத்தில் சிறப்பாக இடம்பெற்ற அருள்மிகு ஆதிவிநாயகர் தேர்த் திருவிழா



புத்தாண்டு தினத்தில் வவுனியா, வைரவபுளியங்குளத்தில் எழுந்தருளியிருக்கும் ஆதிவிநாயகர் திருக்கோவில் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டு புத்தாண்டு வழிபாட்டிலும் தேர்திருவிழா வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

புத்தாண்டை முன்னிட்டு வவுனியா ஆதிநாயகர் ஆலயத்தில் தேர்த்திருவிழா சிறப்பாக இடம்பெற்றது. வவுனியாவில் உள்ள முக்கிய திருத்தலங்களில் ஒன்றாகிய வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் திருக்கோவிலின் மகோற்சவப் பெருவிழா கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

மகோற்சவப் பெருவிழாவின் 9 ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழா மகோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ திவாகரக்குருக்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.



ஆதிவிநாயகர் பெருமானுக்கு மேளதாள வாத்தியங்கள் முழங்க விசேட அபிடேகங்கள் இடம்பெற்று உள்வீதி வலம் வந்த ஆதிவிநாயகப் பெருமான், வெளி வீதியில் பிரவேசித்து அலங்கரிக்கப்பட்ட தேரில் அமர்ந்து அடியார்களுக்கு அருள்பாலித்துடன், பக்த அடியார்கள் சிதறு தேங்காய் அடித்தும், அங்க பிரதிஸ்டை செய்தும், கற்பூரச் சட்டி ஏந்தியும், ஆதிவிநாயகப் பெருமானை அரோகரா கோசத்துடன் வழிபட ஆதிவிநாயகர் பெருமான் தேரில் வலம் வந்து அடியார்களுக்கு புத்தாண்டு தினத்தில் அருள்பாலித்தார்.

குரோதி புத்தாண்டு தினத்தில் இத் தேர் திருவிழா இடம்பெற்றமையால் வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்த அடியவர்கள் விநாயகப்பெருமானை வழிபட்டதுடன், தமக்குள் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பரிமாறிக்கொண்டனர்.

(05 - 100)

# காணாமல்போனவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டம்

## புதுவருட தினத்தில் நடந்தது



சித்திரை புதுவருடத்தினமான ஞாயிற்றுக்கிழமை வவுனியா தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அவர்கள் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொண்டுவரும் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக குறித்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவிக்கையில் -

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்ற, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப்பெறுவதற்காக 2611ஆவது நாளாக நாம் போராடிவருகின்றோம்.

அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் தமிழர்களின் குழு ஒன்று அமெரிக்க சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இது எமக்கு மகிழ்ச்சியான விடயம். இவர்கள் சேர்ந்து, தமிழர்கள் மீதான அமெரிக்கக் கொள்கையில் ஒரு மாற்றத்தை வலியுறுத்தி, செயலாளர் பிளிங்கனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர்.

இலங்கையில் நடந்ததும் நடப்பதும் இனப்படுகொலை என்பதை அவர்கள் அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தனர். அத்துடன், தமிழர்கள் அரசியல் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கும் உரிமை உள்ளது. அவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு தகுதியானவர்கள். இதன் மூலம் தமிழர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வகையில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தனர்.

அமெரிக்காவில் உள்ள நமது தமிழர்களின் ஆதரவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் மற்றும் 10 அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே தமிழ் அரசியல்வாதிகள் மாறிவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்றவாறு தம்மை மாற்றியமைக்க வேண்டும். அவர்கள் அரசியலில் இருந்து பின்வாங்கி, புதிதாக நிறுவப்பட்ட இறையாண்மை நாடுகளான மொண்டினீக்ரோ, தெற்கு சூடான், கொசோவோ, கிழக்கு திமோர் போன்ற நாடுகளின் முன்மாதிரியைப்பின்பற்றி, தமிழ் இறையாண்மையைமீட்டெடுக்க புதிய தலைமுறையை அனுமதிக்க வேண்டும். - என்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசன் இல்ல சிறார்களின் புத்தாண்டு விளையாட்டு விழா





(வி.ரி. சகாதேவராஜா)

தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ணபுரத்தில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் சிறுமியர் இல்ல மாணவர்களின் சித்திரை புத்தாண்டுவிளையாட்டு விழா இடம்பெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் பரிசுகளை வழங்கி வைத்தார். (05)



# கிண்ணியா ஆலங்கேணி கோயில் புத்தாண்டு விசேட பூஜை வழிபாடு





(எச்.எம். ஹலால்தீன் )

கிண்ணியா ஆலங்கேணி பிள்ளையார் கோயிலில் குரோதி வருட புத்தாண்டு தினத்தை முன்னிட்டு விசேட பூஜைகள் இடம் பெற்றன.

இதில் பலர் கலந்து கொண்டு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர். (05)



# கற்பிட்டி அல் அக்ஸாவின் சிரமதான பணிக்கு அழைப்பு

(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் செவ்வாய்க்கிழமை இடம்பெறும் சிரமதான பணியில் பாடசாலையின் சகல பெற்றோர்கள் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என சகலரையும் கலந்து கொள்ளுமாறு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எப் சாஜீனாஸ் அறிவித்துள்ளார்.

நீண்ட விடுமுறைக்கு பின்னர் பாடசாலைகல்விநடவடிக்கைகளுக்காக மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலில் சிரமதானம் மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது. இதன் அடிப்படையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் ஒத்துழைப்புடனும் பெற்றோர்களின் பங்களிப்புடனும் செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் பி.ப 12.30மணிவரைநடைபெறும்மேற்படி சிரமதான பணிக்கு சகலரினதும் வருகை வரவேற்கப்படுகின்றது. (05)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் 150 ஸ்மார்ட் கழிவறைகள்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 150 ஸ்மார்ட் கழிவறை அமைப்பு நிறுவப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம்மற்றும்கொழும்புதுறைமுகத்திற்கு8.4மில்லியன்அமெரிக்கடொலர் பெறுமதியான அதிநவீன ஸ்கேனர் இயந்திரங்களை ஜப்பான் அரசாங்கம் வழங்கி வைத்தது. இலங்கைக்கான ஜப்பானியதூதுவர்மிசுகோஷிஹிடேகியால்கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்காகமுதலாவதுஉபகரணத் தொகுதிதுறைமுகங்கள், கப்பல்போக்குவரத்துமற்றும்விமானப்போக்குவரத்து அமைச்சர்நிமல்சிறிபாலடிசில்வாவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்துகட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத் தில் 150 ஸ்மார்ட் கழிவறை அமைப்பு நிறுவப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கைக்குபிரவேசிக்கும்பிரதான இடமாகக் காணப்படும் கட்டுநாயக்க சர்வதேச விமானத்தின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உயர் தொழில்நுட்ப உபகரணங்களை ஜப்பான் அரசாங்கம் வழங்கியுள்ளது. இந்நிலையில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்காக ஜப்பான் அரசாங்கம் தொடர்ச்சியாகஆதரவளிக்கும்என்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வவுனியா - தாலிக்குளத்தில் மதுபோதையில் கைகலப்பு

## ஒருவர் படுகாயம்

வவுனியா, தாலிக்குளம்பகுதியில்மதுபோதையில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக ஒருவர் காலில் படுகாயமடைந்துள்ளார் என பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு தினமான ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் வசிக்கும் இருவருக்குஇடையில்மதுபோதையில்வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது. இதன்போது, ஒருவர் மண்வெட்டியை எடுத்து ஒருவரின் காலில் கொத்தியுள்ளார். இதனையடுத்து காலில் கடும் காயங்குள்ளான 27 வயது நபர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பானமேலதிகவிசாரணைகளைபூவரசன்குளம் பொலிசார் முன்னெடுத்துள்ளனர். (05 - 100)

# போதைமாத்திரைகளை விழுங்கிய நிலையில் வந்த வெளிநாட்டுப் பெண் விமான நிலையத்தில் கைது

## 3 கோடி ரூபா பெறுமதியான பொருகள் மாட்டின



சுமார் 75 கொக்கெய்ன் போதைமாத்திரைகளை விழுங்கிய நிலையில் விமான நிலைத்திற்கு வந்த வெளிநாட்டுப் பெண்ணொருவர் விமானநிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கடந்த 12 ஆம் திகதி விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மடகஸ்கரைச் சேர்ந்த 38 வயதுடைய பெண்ணே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட கொக்கெய்ன் போதைப்பொருளின் பெறுமதி சுமார் 3 கோடியே 50 லட்சம் ரூபாவென சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த பெண் எத்தியோப்பியாவில் இருந்து இந்தியாவுக்கு வந்து இந்தியாவின் மும்பையில் இருந்து இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.

போதைப்பொருளைவிழுங்கியநிலையில்கைதுசெய்யப்பட்ட பெண்ணை நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று விழுங்கிய கொக்கெய்ன் மாத்திரைகளை வெளியேற்றினர்.

இதையடுத்து மேலதிக விசாரணைகளுக்காக குறித்த பெண் கொக்கெய்ன் போதை மாத்திரைகளுடன் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான பெருந்தொகை வாகனங்கள் மாயம்

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 679 வெள;வேறு வாகனங்கள் போதிய தகவல்கள் இன்றி காணாமல் போயுள்ளன என தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பில் 2019 ஆம் ஆண்டு தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசேட தணிக்கையிலே இந்த விடயம் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

அதன்படி, 679 வாகனங்கள் போதிய தகவல்கள் இன்றி இடம்பெயர்ந்தமை தெரியவந்துள்ளது.

அதில் 240 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு கணக் காய்வுக்கு அறிவித்துள்ள போதிலும், இதனை உறுதிப்படுத்தும் வகையிலான போதிய தகவல்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் வெளியி டப்பட்டுள்ள வருடாந்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுகாதார அமைச்சின் கணக்காய்வு அவதானிப்புகள் ஏனைய 439 வாகனங்கள் தொடர்பில் நான்கு வருடங்களாக எந்தத் தகவலும் கண்டறியப்படவில்லை எனத் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மட்டக்களப்பில் விபத்து: பலர் காயமடைந்தனர்

மட்டக்களப்புதலைமையகபெலிஸ்பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பிரதான வீதியில் பாரிய விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விபத்து ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மூன்று வாகனங்கள் பாரிய சேதமடைந்துள்ளதுடன் சிறுகுழந்தை உட்பட பலர் பலத்த காயமடைந்துள்ளனர்.

மேலும் இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆதார வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பிலான மேலதிக விசாரனைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (05)

# சம்மாந்துறையில் முக்கிய சந்திப்பு



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சமூக ஊடக ஆர்வலர்கள் ஒன்றிணைந்த சம்மாந் துறை ஊடக மையத்தின் உறுப்பினர்களுக்கும் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை பிணக்குகள் தீர்ப்பு பொறுப்பாளரும் ஓய்வு பெற்ற பிரதான பொலிஸ் பரிசோதருமான எம். எஸ். அப்துல் மஜீட் அவர்களுடனான சந்திப்பு சம்மாந்துறை ஊடக மைய காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்றது.

இதன் போது சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை பிணக்குகள் தீர்ப்பு பொறுப்பாளரும் ஓய்வு பெற்ற பிரதான பொலிஸ் பரிசோதருமான எம். எஸ். அப்துல் மஜீட் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் சம்மாந்துறையில் காணப்படும் பள்ளிவாசல்கள், சம்மாந்துறையின் அழிந்து போகும் பழைமையான வரலாறுகள், சம்மாந்துறையில் புதைந்து கிடக்கும் கலைஞர்கள் மற்றும் சாதனையாளர்கள் போன்றபலவிடயங்களை ஊடகம் என்ற ரீதியில் நீங்கள் வெளிக்கொண்டு வரவேண்டியபொறுப்பும், கடமையும் உங்களிடம் காணப்படுகிறது.

மேலும்எதிர்காலத்தில் சம்மாந்துறையில் இளம் ஊடகவியலாளர்களை உருவாக்கவும், சம்மாந் துறை ஊடக மையத்தை சரியான பாதையில் கொண்டு செல்லவும் பல ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஊடக மையத்தின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (05)



# 'மருதூர் சதுக்கம்' கடலரிப்பால் பாதிப்பு

## சாய்ந்தமருதில் நடவடிக்கை எடுக்க கோரிக்கை



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருதில்கடலரிப்பின்வேகம் மீண்டும்அதிகரித்துள்ளதால்இப்பிரதேச மக்கள் பொழுதுபோக்கிற்காக ஒன்றுகூடும் மருதூர் சதுக்கம் என அழைக்கப்படும் கடற்கரை திடல் அதிக பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. அது மட்டுமல்லாது, இந்த சதுக்கத்தோடு இணைந்ததாக காணப்படும் கொங்றீட் வீதியின் ஒரு பகுதி கடலுக்குள் உள்வாங்கப்படுள்ளதுடன், இவ்விடத்தில் அமைந்துள்ள மீனவர் பல்தேவை கட்டடமும் இடிந்துவிழும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களில் கடலரிப்பு ஏற்பட்டபோது கல் அணைகள் அமைக்கப்பட்டபோதும் இந்த பிரதேசத்தை அண்டியதாக கடலரிப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படாமையால் மருதூர் சதுக்கம் கடலரிப்புக்குள்ளாகியுள்ளது.

எனவே, தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு மருதூர் சதுக்கம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைப் பாதுகாக்க கரையோரம் பேணல் திணைக்களம், பிரதேசசெயலகம் என்பன இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் இது தொடர்பில் பிரதேச அரசியல்வாதிகள் கவனத்திலெடுத்து கல் அணை அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசங்களில் கல் அணை அமைத்து எஞ்சியிருக்கும் கற்களைப் போட்டு முதற்கட்ட ஏற்பாடுகளையேனும் செய்ய முயற்சிக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.04.2024இல் வெளியிடப்பெற்றது